**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2648/ஆ5/2024, நாள்.27.06.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி மற்றும தொடக்கக் கல்வி – பள்ளிகள், விடுதிகளில் உடல் ரீதியான தண்டனை – பள்ளிகளுக்கு வழங்கப்படும் வரிகாட்டுதல்கள் – ஒவ்வொரு பள்ளியிலும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளல் – பள்ளித் தலைமையாசிரியர்கள் இந்த வழிகாட்டுதல்களைப் பின்பற்றுதல் – மாணவர்களுக்கு பாதுகாப்பான வளர்ப்பு சூழலை உருவாக்குதல் – தொடர்பாக

பார்வை சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.007790/ஜெ /எஸ்1/2024, நாள். 26.04.2024

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, பள்ளிகள், விடுதிகள் மற்றும் குடும்பங்களுக்குள்ளேயும் உட்பட பல்வேறு அமைப்புகளில் உடல் ரீதியான தண்டனைகள் ஒரு பரவலான பிரச்சினையாக உள்ளது. அதிர்ச்சியூட்டும் வகையில், கணிசமான சதவீத குழந்தைகள் உடல் ரீதியான தண்டனை அனுபவிக்கிறார்கள் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய தவறான நடைமுறைகளை அகற்ற ஒருங்கிணைந்த முயற்சிகள் உடனடி தேவையாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையில் பள்ளிகளில் உடல் ரீதியான தண்டனையை நீக்குவதற்கான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி பள்ளி மாணவர்களுக்கு பாதுகாப்பான வளர்ப்புச் சூழலை உருவாக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை மேல்நிலை / உயர்நிலை / நடுநிலை மற்றும் தொடக்க பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. இப்பொருள் சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – பார்வையின் படி பெறப்பட்ட வழிகாட்டுதல்கள்

27/6/24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

27.06.24

பெறுநர் –
தலைமையாசிரியர்கள்,
அனைத்து வகை மேல்நிலை / உயர்நிலை / நடுநிலை மற்றும் தொடக்க பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்
   அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலைக் கல்வி) வேலூர் மாவட்டம்
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)